தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 75/ந/2024

நாள். 22 . 10 .2024

| | | |
|---|---|---|
| திரு.இ.ரஜினி<br>இடங்கணசாலை | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையாளர்,<br>இடங்கணசாலை நகராட்சி,<br>இடங்கணசாலை | – | எதிர்மனுதாரர் |

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இடங்கணசாலை கிராமம், புத்திரன் தெரு, கதவு எண்.54/A என்கிற முகவரியில் வசிக்கும் திரு.இ.ரஜினி என்பவரின் 06.05.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.05.2024 அன்று பெறப்பட்டு, 75/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**ஆணை**

சேலம் மாவட்டம், இடங்கணசாலை, புத்திரன் தெரு, கதவு எண்.54/A என்கிற முகவரியில் வசிக்கும் திரு.இ.ரஜினி என்பவர் தமது 06.05.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

கடந்த 22.02.2024 அன்று பொதுபாதை ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டி இடங்கணசாலை நகராட்சி நிர்வாகத்திற்கு பதிவு அஞ்சல் மூலம் மனு அளித்தேன். மனு அளித்து 30 நாட்கள் கடந்தும் நகராட்சி நிர்வாகம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எ) துறை அரசாணை (நிலை) எண்.73, நாள் 11.06.2018–ன்படி

எந்தவொரு அரசாணையையும் பின்பற்றவில்லை. மனுவின் நடவடிக்கை குறித்த எந்த விவரமும் தெரிவிக்கப்படவில்லை. எனவே **26.03.2024** அன்று பொது பாதை ஆக்கிரமிப்பு தொடர்பாக இடங்கணசாலை நகராட்சி நிர்வாகத்திற்கு ஒரு நினைவூட்டல் மனு பதிவு அஞ்சல் மூலம் அளித்தேன். அதே **26.03.2024** அன்று பொது பாதை ஆக்கிரமிப்பை அகற்றாத இடங்கணசாலை நகராட்சி சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் மீது நடவடிக்கை வேண்டியும், எனது **22.02.2024** மனு மீது நடவடிக்கை எடுக்க சொல்லியும் மண்டல இயக்குநர் அவர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் மனு அளித்தேன். அதே **26.03.2024** அன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் எனது நினைவூட்டல் மனுவின் நகலை அளித்தேன்.

அதன்பிறகு கடந்த **04.04.2024** அன்று இடங்கணசாலை நகராட்சி நிர்வாக அலுவலர் ஒருவர் இடத்தை ஆய்வு செய்ய வந்தார். அவரிடம் சாக்கடை கால்வாய் குறித்தும், மண், கற்களை கொட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதையும் சாக்கடை கழிவுநீர் தேங்கி இருப்பதையும் சுட்டிக்காட்டினேன். அரசு அலுவலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு நோட்டீஸ் வைப்பதாக கூறிச்சென்றார். மேலும் பொது பாதையை ஆக்கிரமித்து உள்ளவர்களிடம் வழிபாதை எல்லை பிரச்சனை அடிக்கடி வருவதால் பாதையின் எல்லையை சர்வே செய்து அளந்து, நீளம் அகலம் எல்லைகளை வகுத்து தருமாறு வாய்மொழி வழியாக கேட்டுக்கொண்டேன். அதன்பிறகு கடந்த **06.04.2024** அன்று தூய்மை பணியாளர்கள் மூலம் இடத்தில் இருக்கும் புற்கள், மரங்கள், குப்பைகளை அகற்றி சென்றார்கள். அவர்களிடம் மீதம் இருக்கும் மண், கற்கள், சாக்கடை கழிவு நீர், சாக்கடை கால்வாய் பற்றி கேட்டதற்கு பிறகு மற்ற துறையை சார்ந்த அலுவலர்கள் ஒவ்வொரு நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று கூறிச்சென்றார்கள். அதன்பிறகு இதுநாள் வரை வேறெந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அதன் பின் மேல் நடவடிக்கை எடுத்தாலும் அந்நடவடிக்கை குறித்து தகவல் எதுவும் வழங்கப்படவில்லை. மனு அளித்து **60** நாட்கள் கடந்தும் எனது மனுவின் குறைகள் முழுமையாக களையப்படவில்லை. எனவே ஆக்கிரமிப்பை சரிவர அகற்றாத இடங்கணசாலை நகராட்சி சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன் என்றும் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கியும், முற்கள், புதர்கள், குப்பைகள் மண்டிவிடுவதாலும் எங்களுக்கு மாற்றுப்பாதை வேறெதுவும் இல்லாததால் பாதையில் நடந்து செல்லவும் வாகனங்கள் செல்லவும் மிகவும் சிரமம் ஏற்படுகிறது.

எங்களுடைய பொது பாதையை கான்கிரீட் சாலையாக அமைத்து எங்களுடைய பொது பாதை பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்தி கொடுக்க வேண்டுமாய், கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2.** மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவத்தின் **05.08.2024** நாளிட்ட கடிதம் மூலம் இடங்கணசாலை நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

**3.** இடங்கணசாலை நகராட்சி ஆணையாளர் தனது **22.08.2024** நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

“மனுதாரர் தனது மனுவில் இடங்கணசாலை நகராட்சி எல்லைக்குட்பட்ட கிராம நத்தம் சர்வே எண்.485 தற்போதைய உட்பிரிவின்படி சர்வே எண்.911–ன் அருகே உள்ள பாதையின் இருபுறங்களிலும் அருகே இருப்பவர்கள் மண்ணை கொட்டி உள்ளதாகவும் மற்றும் சாக்கடை கால்வாய் வெட்டப்பட்டு திறந்த நிலையில் உள்ளதால் வாகனங்களில் செல்லும்போது விபத்து ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் **28.03.2024** நாளிட்ட கடிதத்தின்படி மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் கள ஆய்வு செய்ததில் மண் தடமாக உள்ளது. மேலும் இத்தடத்தின் அருகில் உள்ள வீட்டு உரிமையாளரை விசாரித்ததில் தனது வீட்டின் சுற்றுச்சுவர் அருகில் நீர் தேங்கியிருக்கும் இடமானது தனது பட்டா நிலம் என்றும் எனது வீட்டில் உபயோகப்படுத்தும் நீரை எனது பட்டா இடத்தில்தான் பயன்படுத்தி வருகிறேன் என்று கூறுகிறார். எனவே இந்த இடத்தை தனிநபரது பட்டா இடமா அல்லது பொது பாதையா என்பதை அறிய நில அளவையர் மூலம் அளந்து அறிக்கை வழங்க கோரி இவ்வலுவலக கடிதங்கள் மூலம் வட்டாட்சியர், சங்ககிரி அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. வட்டாட்சியர், சங்ககிரி அவர்கள் மனுதாரர் கோரும் இடத்தை அளந்து அத்து காட்டி அறிக்கை பெற்றவுடன் ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மனுதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே வட்டாட்சியர், சங்ககிரி அவர்களின் அறிக்கை பெற்று மனுதாரர் வழங்கிய புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துள்ளார்.

**4.** மனுதாரர் திரு.இ.ரஜினி மற்றும் எதிர்மனுதாரரான இடங்கணசாலை நகராட்சி ஆணையர் ஆகியோரை **26.09.2024** அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் **09.09.2024** நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5.** மனுதாரர் திரு. E. ரஜினி அவர்கள் **26.09.2024** ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

நான் **22.02.2024** அன்று பொது பாதை ஆக்கிரமிப்பினை அகற்ற வேண்டி இடங்கணசாலை நகராட்சி நிர்வாகத்திற்கு மனு அளித்தேன். **30** நாட்கள் கடந்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எ) துறை அரசாணை (நிலை) எண்.**73**, நாள். **11.06.2018**–ன்படி எந்தவொரு அரசாணையையும் நகராட்சி நிர்வாகத்தினர் பின்பற்றவில்லை. மீண்டும் நான் **26.03.2024** அன்று மறுபடியும் பொது பாதை ஆக்கிரமிப்பு தொடர்பாக நினைவூட்டு மனுவினை அளித்தேன். மேலும் சேலம் மாவட்ட ஆட்சியர், மண்டல இயக்குநர் ஆகியோருக்கும் மனு அளித்துள்ளேன். கடந்த **06.04.2024** அன்று தூய்மை பணியாளர்கள் மூலம் மேற்கண்ட இடத்தில் இருக்கும் புற்கள், மரங்கள், குப்பைகளை அகற்றி சென்றார்கள். அவர்களிடம் மீதம் இருக்கும் மண், கற்கள், சாக்கடை கழிவுநீர், சாக்கடை கால்வாய் பற்றி கேட்டதற்கு பிறகு மற்ற துறை சார்ந்த அலுவலர்கள் ஒவ்வொரு நடவடிக்கையாக எடுப்பார்கள் என கூறினார்கள். ஆனால் **210** நாட்கள் ஆகியும் எனது மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைகள் முழுமையாக களையப்படவில்லை.

எனவே 210 நாட்களுக்கு மேலாகியும் மேற்படி குறைகளை களைய உரிய நடவடிக்கை எடுக்காத நகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன் எனவும் எனது 06.05.2024 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ள விவரங்களை மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்களுடைய பொதுப்பாதையில் குடிநீர் குழாய் உடைப்பு ஏற்பட்டு பல மாதங்களாக சாக்கடை நீர் கழிவு நீரோடு கலப்பதை சரிசெய்து கொடுக்க வேண்டுகிறேன். இடங்கணசாலை நகராட்சியில் பல கான்கிரீட் சாலைகள், தார்சாலைகள் பணி நடைபெற்று வருகிறது. எனவே எங்களுடைய பாதையையும் கான்கிரீட் சாலையாகவோ, தார்சாலையாகவோ அமைத்து எங்களுடைய பொதுப்பாதை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்தி கொடுக்க வேண்டுகிறேன். பொதுப்பாதையில் கழிவுநீர் தேங்கி பொது சுகாதார சீர்கேடும், தொற்று நோய்களுக்கு வழிவகுக்கும் பகுதியில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

தொடர்ந்து எங்களுடைய பகுதி எந்தவித அடிப்படை வசதிகளும் செய்து தராமல் புறக்கணிக்கப்படுவதால் பாரபட்சம் பாராமல் எங்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுகிறேன்.

நான் இன்று 26.09.2024 இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட எனது கோரிக்கையினை தெரிவித்துக்கொள்கிறேன்.

- பொது பாதையில் மீதம் இருக்கும் மண், கற்கள், சாக்கடை கழிவுநீர் மற்றும் சாக்கடை கால்வாய் பணிகளை விரைவில் முடித்திட ஆவண செய்ய இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

- மேலும் நான் புகார் மனு அளித்து 210 நாட்களுக்கு மேலாகியும் உரிய நடவடிக்கையினை எடுக்கத் தவறிய நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கையினை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.

- பொதுப்பாதையில் கழிவுநீர் தேங்கி பொது சுகாதார சீர்கேடும், தொற்று நோய்களுக்கு வழிவகுக்கும் பகுதியில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

- தொடர்ந்து எங்களுடைய பகுதி எந்தவித அடிப்படை வசதிகளும் செய்து தராமல் புறக்கணிக்கப்படுகிறது. எனவே பாரபட்சம் பாராமல் எங்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுகிறேன்.

- மேலும் இடங்கணசாலை நகராட்சி பொது தகவல்அலுவலர் அவர்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன்படி கோரப்பட்ட தகவல்களுக்கு அலட்சியப்போக்குடனும், கவனக்குறைவுடனும் அவ்வலுவலக தவறுகளை மறைக்கும் நோக்கில் முற்றிலும் தவறான தகவலை தொடர்ந்து வழங்குகிறார். அவர் மீதும் துறை வாரியான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

- எனது மனு தொடர்பான ஆவணங்கள், மற்றும் போட்டோ நகல்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுக்களை சான்றாக இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

**6)** இடங்கணசாலை நகராட்சி ஆணையாளர் சார்பாக இடங்கணசாலை நகராட்சியில் பணிபுரியும் பணி மேற்பார்வையாளர் **26.09.2024** அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு.இ.ரஜினி அவர்கள் இடங்கணசாலை நகராட்சி எல்லைக்குட்பட்ட கிராம நத்தம் சர்வே எண்.485 தற்போதைய உட்பிரிவின்படி சர்வே எண். 911–ன் அருகே உள்ள பாதையின் இருபுறங்களிலும் அருகே இருப்பவர்கள் மண்ணை கொட்டி உள்ளதாகவும், சாக்கடை கால்வாய் வெட்டப்பட்டு திறந்த நிலையில் உள்ளதால் வாகனங்களில் செல்லும்போது விபத்து ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதத்தின்படி மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் வீட்டு உரிமையாளரை விசாரித்ததில் தனது வீட்டின் சுற்றுச்சுவர் அருகில் நீர் தேங்கியிருக்கும் இடமானது தனது பட்டா நிலம் என்றும் தனது வீட்டில் உபயோகப்படுத்தும் நீரை எனது பட்டா இடத்தில்தான் பயன்படுத்தி வருகிறேன் எனவும் கூறுகிறார்.

மேலும் மனுதாரர் கூறிய இடத்தில், சுகாதார கேடு விளைவிக்காவண்ணம் சாக்கடை நீர் தேங்கியவற்றை மண்ணை கொண்டு மூடப்பட்டது. மேலும் பாதையில் இருந்த புதர்களும் அகற்றப்பட்டது.

எனவே இந்த இடத்தை தனிநபரது பட்டா இடமா அல்லது பொது பாதையா என்பதை கண்டறிய நில அளவையர் மூலம் அளந்து அறிக்கை வழங்க கோரப்பட்டுள்ளது. வட்டாட்சியர், சங்ககிரி அவர்கள் மனுதாரர் கோரும் இடத்தை அளந்து அத்து காட்டி அறிக்கை பெற்றவுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 22.08.2024 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களை மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக் கொள்கிறேன். நான் 26.09.2024 இன்று இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்ட எனது வாக்குமூலத்தை சமர்ப்பிக்கிறேன்.

- மனுதாரர் தெரிவித்துள்ள பொதுப்பாதை என்று சொல்லப்படும் இடம் பொதுபாதையா அல்லது தனிநபர் பட்டா இடமா என்பதை நில அளவையர் மூலம் அளந்து அறிக்கை பெற்றவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- வட்டாட்சியர், சங்ககிரி அவர்கள் மனுதாரர் கோரும் இடத்தை அளந்து அத்து காட்டி அறிக்கை பெற்றவுடன் ஆக்கிரமிப்புகள் இருப்பின் அதனை உடனடியாக அகற்றிட உரிய நடவடிக்கை நகராட்சியால் மேற்கொள்ளப்படும்.

- அறிக்கை பெற்றவுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், இடங்கணசாலை நகராட்சி பணிமேற்பார்வையாளரின் வாக்குமூலம், நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் ஆவணங்கள், ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:—

மனுதாரர் இடங்கணசாலை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பொதுபாதை ஆக்கிரமிப்பு சம்மந்தமாக நகராட்சி ஆணையாளருக்கு 22.02.2024 அன்று மனு அளித்தும் நினைவூட்டல் மனு அனுப்பியும், பொதுப்பாதை ஆக்கிரமிப்பை அகற்றாத நகராட்சி சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் மீது நடவடிக்கை வேண்டியும், தனது 22.02.2024 மனு மீது நடவடிக்கை எடுக்க சொல்லியும் மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் தபால் அனுப்பிய பிறகு, 04.04.2024 அன்று இடங்கணசாலை நகராட்சி நிர்வாக அலுவலர் ஒருவர் மேற்படி இடத்தை ஆய்வு செய்ய வந்ததாகவும் அவரிடம் சாக்கடை கால்வாய் குறித்தும், மண், கற்களை கொட்டி ஆக்கிரமிப்பு செயதுள்ளதையும் சாக்கடை கழிவு நீர் தேங்கி இருப்பதையும் சுட்டிக்காட்டி அவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு நோட்டீஸ் வைப்பதாக கூறிச்சென்று பின்னர் 06.04.2024 அன்று தூய்மை பணியாளர்கள் மூலம் மேற்படி இடத்தில் இருக்கும் புற்கள், மரங்கள், குப்பைகளை அகற்றி சென்றதாகவும், மீதம் இருக்கும் மண், கற்கள், சாக்கடை கழிவு நீர், சாக்கடை கால்வாய் குறித்து துறை சார்ந்த அலுவலர்கள் ஒவ்வொரு நடவடிக்கை எடுப்பார்கள் என கூறி சென்றதாகவும் ஆனால் மனு அளித்து 60 நாட்கள் கடந்தும் தனது மனுவின் குறைகள் முழுமையாக களையப்படவில்லை என தெரிவித்து, ஆக்கிரமிப்பை சரிவர அகற்றாத இடங்கணசாலை நகராட்சி சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

இது குறித்து நகராட்சி ஆணையர் மனுதாரர் தெரிவித்துள்ள இடத்தினை கள ஆய்வு செய்ததில் மண் தடமாக உள்ளது என்றும் இத்தடத்தின் அருகில் உள்ள வீட்டு உரிமையாளரை விசாரித்ததில் தனது வீட்டின் சுற்றுச்சுவர் அருகில் நீர் தேங்கியிருக்கும் இடமானது தனது பட்டா நிலம் என்றும் தனது வீட்டில் உபயோகப்படுத்தும் நீரை தனது பட்டா இடத்தில்தான் பயன்படுத்தி வருகிறேன் என்று கூறியதாகவும், எனவே அந்த இடத்தை தனிநபரது இடமா அல்லது

பொதுபாதையா என்பதை அறிய நில அளவையர் மூலம் அளந்து அறிக்கை வழங்கக்கோரி கடிதங்கள் மூலம் வட்டாட்சியர், சங்ககிரி அவர்களுக்கு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதும், வட்டாட்சியர் மனுதாரர் கோரும் இடத்தை அளந்து அத்து காட்டி, அறிக்கை பெற்றவுடன் ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் இதர ஆவணங்களின்படியும், நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் நகராட்சி பணி மேற்பார்வையாளரின் வாக்குமூலம் ஆகியவற்றில் தெரிவித்துள்ளவாறு மனுதாரர் தெரிவித்துள்ள பொதுப்பாதை என சொல்லப்படும் இடம் தனிநபரது பட்டா இடமா அல்லது பொதுப்பாதையா என்பதை கண்டறிய நில அளவையர் மூலம் அளந்து, அது குறித்த அறிக்கையினை வட்டாட்சியர், சங்ககிரி அவர்களிடமிருந்து பெற்றவுடன் ஆக்கிரமிப்புகள் இருக்கும்பட்சத்தில் அதனை உடனடியாக அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை இரண்டு மாதத்திற்குள் தமிழக அரசு விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படியும், மாண்பமை நீதிமன்ற அறிவுறுத்தல்கள்/ வழிகாட்டுதல்களின்படியும் நகராட்சி நிர்வாகம் மேற்கொள்ளவேண்டும் என நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரர் குறிப்பிடும் இடம் தனிநபர் பட்டா இடம் என்று தெரியும்பட்சத்தில், சுற்றுசூழல் மற்றும் பொதுசுகாதாரத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாவண்ணம், அவ்விடத்தை மனுதாரர் பயன்படுத்திக்கொள்ளுமாறும் பட்டாதாரருக்கு உரிய அறிவுரைகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

**2024**ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் **22**–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

**1)**திரு. இ.ரஜினி,
த/பெ. திரு.இருசாக்கவுண்டர்,
கதவு எண்.**54**/A. புத்திரன் தெரு,
இடங்கணசாலை,
சேலம் மாவட்டம்.

**2)**நகராட்சி ஆணையர்,
இடங்கணசாலை நகராட்சி,
இடங்கணசாலை.
சேலம் மாவட்டம்

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/10/24

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சென்னை–600 032